செய்தி வெளியீடு எண் : 342 நாள்: 3.7.2009

# செய்தி வெளியீடு

## அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்கள் / முதல்வர்கள் கலந்தாய்வுக் கூட்டம்

நாள் : 18-07-2009 இடம் : சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கம்

நேரம் : காலை 10.00 மணி

அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் பங்குபெறும் கலந்தாய்வுக் கூட்டம் 18-07-2009 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கக் கட்டிடத்தில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர், முனைவர் க. பொன்முடி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்காணும் பொருட்கள் குறித்து கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

1. உயர்கல்வியின் தரத்தை உயர்த்துதல்
2. விருப்பார்ந்த தகுமுறை நிறைவுத் திட்டம் CBCS (மறுசீராய்வு)
3. ஒருமைப் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல்
4. புதிய பாட வகுப்புகள் (New Courses) அறிமுகம் செய்தல்
5. ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வு முறை – விதிமுறைகள் முடிவு செய்தல்.

மேற்காண் கூட்டத்தில் பல்கலைக்கழக துணை வேந்தர்கள், கல்லூரிக்கல்வி இயக்குநர்கள் மற்றும் கல்வியாளர்கள் பங்குபெறுவார்கள்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திரு. க. கணேசன், இஆப.,அரசு முதன்மைச் செயலாளர்,
உயர்கல்வித்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.